சுற்றுநிருப இல: 1993/3

எனது இல: கசே /1/105
கல்வி, உயர்கல்வி அமைச்சு,
''இசுருபாய''
பத்தரமுல்ல.

சகல மாகாணக் கல்வி பணிப்பாளர்களுக்கும்,
கோட்டங்களுக்குப் பொறுப்பான பி. க. ப. களுக்கும்,

## பாடசாலைகளுக்குத் தீர்வையற்ற வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான அனுமதி வழங்குதல்

பாடசாலைகளில் மாணவர்களின் போக்குவரத்துத் தேவைகளுக்கென பயன்படுத்துவதற்காக 15 ஆசனங்களைக் கொண்ட வான் அல்லது பஸ் வண்டிகளை, நலன் விரும்பிகள் அன்பளிப்பு என்ற மட்டத்தில் தீர்வையின்றிக் கொள்வனவு செய்வதற்கு இடமளிப்பதென திறைசேரியின் செயலாளர் தீர்மானித்துள்ளார்.

தீர்வையின்றி வாகனங்களை கொள்வனவு செய்வதற்கான அதிகாரம் தீர்வு கட்டளைச் சட்டத்தின் 19 ஏ பிரிவுக்கமைய பெற்றுக்கொடுக்க முடியுமெனவும், அவ்வாறான விண்ணப்பங்கள் கல்வி, உயர்கல்வி அமைச்சின்செயலாளரின் அங்கீகாரத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக உங்கள் மாகாணத்தில்/ கோட்டத்தில் உள்ள பாடசாலைகளின் வாகனத் தேவைகள் தொடர்பான விண்ணப்பங்களைப் பெற்று உங்கள் விதப்புரையுடன் கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

அவ்வாறு செய்யும் போது

1. பாடசாலை
2. வாகனத்தின் பராமரிப்பு தொடர்பான சுருக்க அறிக்கை.
3. பாடசாலையின் வாகனமொன்றைப் பெற்றுக்கொடுக்க முன்வருபவரின் பெயர்

போன்ற விபரங்களைச் சமர்பித்தல் வேண்டும்.

ஆர்.ஐ.ரி.அலஸ்
கல்வி இராஜாங்க செயலாளர்
கல்வி, உயர் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்.